S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE ஞாயிறு ஜனவரி 25 * 2026 * மலர் -1 * இதழ்-236* VOL-1 * ISSUE-236 விலை ரூ.3 * பக்கம் -4

### எனது இலக்கில் வென்று விட்டேன்; மிக மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன்:

## 2.0 ஆட்சியும் நாங்களே அமைப்போம்; சட்டசபையில் மு.க.ஸ்டாலின் பேச்சு



**சென்னை, ஜன.25**

திராவிட மாடல் ஆட்சியில் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது. எனது இலக்கில் நான் வென்றுவிட்டேன். தற்போது மிக மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன். 2.0 ஆட்சியையும் நாங்களே அமைப்போம் என சட்டசபையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

தமிழக சட்டசபையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கு பதிலளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:–

2021–ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 6–ஆவது முறையாக வெற்றி பெற்ற போது, ஒரு பக்கம் மகிழ்ச்சி இருந்தாலும், இன்னொரு பக்கம் எனக்கு கவலையும் இருந்தது. அதை நான் மறைக்க விரும்பவில்லை.

இந்தப் பொறுப்பை நான் எப்படி செய்யப் போகிறேன். வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியுமா. மக்கள் விரும்பும் வகையில் ஆட்சி நடத்த முடியுமா. மக்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் ஆட்சி நடத்த முடியுமா என்ற கவலை தான் எனக்கு இருந்தது.

முந்தைய 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில்தமிழ்நாடுஅனைத்து வகையிலும் அனைத்துத் துறையிலும் மிக மோசமான பின்னடைவை சந்தித்து மோசமான நிலையை அடைந்து இருந்தது. அதை சரி செய்தாக வேண்டும். அடுத்து, நமக்கு மேல் இருக்கும் ஒன்றிய அரசு ஒத்துழைக்காத ஓரவஞ்சனை அரசாக இருந்தது.

இந்த இரண்டு நெருக்கடிகளையும்எதிர்கொள்ள வேண்டும் என்பதுதான் எனது கவலைக்கு மிக முக்கியமான காரணங்கள். இடியாப்பச் சிக்கல் என்று சொல்லுவார்களே அப்படியான சூழலில்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். அதனால்தான் கவலை கொண்டவனாக நான் இருந்தேன்.

ஆனால், இப்போது 5 ஆண்டுகள் கடந்த நிலையில் நான் சொல்கிறேன். நான் மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன். இன்னும் சொன்னால், மிக மிக மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன். என்னுடைய மகிழ்ச்சிக்கு காரணம், மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். என்னுடைய இலக்கில் நான் வென்றுவிட்டேன். திராவிட மாடல் அரசின் சாதனைகளால் தமிழ்நாடு தலைநிமிர்ந்தது. மக்கள் மனநிறைவு அடையும் ஆட்சியை வழங்குகிறேன். இன்றைக்கு தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விட அதிகம் வளர்ந்திருக்கிறது. இந்தியாவின் மற்ற மாநிலங்கள் எல்லாம் தமிழ்நாட்டை அண்ணார்ந்து பார்க்கிறார்கள். அதற்கு காரணம் நம்முடைய திட்டங்கள், நாம் செய்துகொண்டிருக்கும் சாதனைகள். இதெல்லாம்தான் என் மகிழ்ச்சிக்கு காரணம்.

அடுத்து இன்னும் பெருமையோடு, கான்பிடண்டாக சொல்கிறேன். நாங்கள் அமைக்கப் போகும் திராவிட மாடல் 2.0 ஆட்சி, எங்கள் சாதனைகளை நாங்களே விஞ்சும் அளவிற்கு இருக்கும். ஆட்சி செய்திருக்கும் 5 ஆண்டுகள், வரப்போகும் ஒளிமயமான எதிர்காலத்தை உணர்த்துவதாக அமைந்திருக்கிறது.

6–ஆவது முறை ஆட்சி அமைந்தபோது, அது விடியல் ஆட்சியாக அமையும் என்று சொன்னோம். அந்த விடியலை ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறோம். கோடிக்கணக்கான மக்கள் மனங்களிலும் முகங்களிலும் மகிழ்ச்சியையும் மனநிறைவையும் நான் பார்க்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரைக்கும், ஒரு சாதனை செய்தால், அதை மிஞ்சுவதாக இன்னொரு சாதனை வரும்; அடுத்து அதை விஞ்வதாக மற்றொரு சாதனை வரும். இப்படி சாதனைக்கு மேல் சாதனைகளைப் படைப்பது தான் திராவிட மாடல்.

இவ்வாறு அவர் பேசினார்.

தினமும் உள்ளாட்சி அரசு படியுங்கள்



சிங்கம்புணரி அருகே உள்ள வாரத்துப்பட்டி கிராமத்தில் புதிய சாலை அமைப்பதற்கான பூமி பூஜையை அமைச்சர் பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்.



குடியரசு தினத்தை முன்னிட்டு நெல்லையப்பர் கோவிலுக்கு வரும் பக்தர்களின் உடமைகளை வெடிகுண்டு தடுப்புப்பிரிவு போலீசார் சோதனை செய்த காட்சி.



வத்தலக்குண்டு அருகே விராலிப்பட்டி பகுதியில் பூத்துக்குலுங்கும் செண்டு மஞ்சள் பூக்களை படத்தில் காணலாம்.

### ராமநாதபுரத்தில் பரிதாபம்:

## மின்சாரம் தாக்கி பெண் சாவு!

### வாட்டர் ஹீட்டர் சுவிட்சை இயக்கிய போது விபரீதம்!!

**ராமநாதபுரம், ஜன.25–**

ராமநாதபுரத்தில் மின்சாரம் தாக்கி பெண் பலியான சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ராமநாதபுரம் மகா சக்தி நகர், ஏழாவது தெருவை சேர்ந்தவர் செல்லப்பாண்டி இவரது மனைவி லதா (52), டிஎன்எஸ்டிசி டிரைவராக பணியாற்றி ஓய்வு பெற்ற செல்லப்பாண்டியன் தற்போது தனியார் பள்ளியில் டிரைவராக வேலை பார்த்து வருகிறார் .

செல்ல பாண்டியன் வேலைக்கு சென்றுவிட்ட நிலையில் அவரது மனைவி லதா நேற்று அவரது வீட்டில் குளிப்பதற்கு வெந்நீர் வைப்பதற்காக வாட்டர் ஹீட்டர் சுவிட்சை ஆன் செய்துள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி மயங்கி விழுந்தார்.

இந்த நிலையில் வேலைக்கு சென்ற கணவர் வீடு திரும்பி வந்து பார்த்தபோது தனது மனைவி மயங்கிய நிலையில் கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்த அவர் வாட்டர் ஹீட்டர் சுவிட்சை ஆப் செய்துவிட்டு அக்கம் பக்கத்தினர் உதவியுடன் அவரை மீட்டு ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்.

அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். அதனை தொடர்ந்து ராமநாதபுரம் கேணிக்கரை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் செந்தில் குமார் தலைமையிலான போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



அவிநாசி யூனியன் சேவூர் அருகே ஸ்ரீமாகாளி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர்.



கர்நாடக அணைகளில் இருந்து காவிர ஆற்றில் உபரிநீர் திறக்கப்பட்டுள்ளதால் ஒகேனக்கல் காவிரியில் திடீரென்று நீர்வரத்து அதிகரித்தது.


## ஆத்தூர் அருகே கால்பந்தாட்டத்தில் கல்லூரி மாணவி சாவு!

**சேலம்,ஜன.25–**

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே அரசு கலை கல்லூரியில் கால்பந்து விளையாட்டில் ஈடுபட்ட கல்லூரி மாணவி மயங்கி விழுந்து இறந்தார்.

சேலம் மாவட்டம் ஆத்தூர்அருகே உள்ள வடசென்னிமலையில் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி செயல்பட்டு வருகிறது. இந்த கல்லூரியில் கடந்த சில நாட்களாக மாணவ மாணவிகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் விடுதியில் தங்கி படிக்கும் ஒசூரைச் சேர்ந்த முதலாம் ஆண்டு கணினி அறிவியல் பயிலும் திவ்யதர்ஷினி (17) பிற்பகலில் தமிழ்த்துறை மற்றும் கணினி அறிவியல் துறை சார்பில் நடந்த கால்பந்தாட்டம்போட்டியில்பங்கேற்று விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது திடீரென மயக்கம் ஏற்பட்டு கீழே



விழுந்துள்ளார். அருகில் இருந்த மாணவ, மாணவிகள் அவரை மீட்டு சிகிச்சைக்காக காட்டுக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு கொண்டு சென்றனர். பின், மேல் சிகிச்சைக்கு ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு மாணவி திவ்யதர்ஷினியை பரிசோதித்த டாக்டர்கள் வரும் வழியிலே அவரது உயிர் பிரிந்துள்ளதாக தெரிவித்தனர்.

அந்த மாணவியின் உடல் பிரேத பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். இதுகுறித்து தகவல் அறிந்து வந்த ஆத்தூர் ஊரக போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கல்லூரியில் சக மாணவிகளுடன் கால் பந்தாட்ட போட்டியில் பங்கேற்று விளையாடிக் கொண்டிருந்த மாணவி ஒருவர் திடீரென உயிரிழந்தது சக மாணவ, மாணவிகளிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.



## வாணியம்பாடி அருகே

# பகுதி நேர நியாய விலை கடை அமைத்து தந்த தமிழக அரசுக்கும் வி.எஸ்.ஞானவேலனுக்கும் பொதுமக்கள் நன்றி!

வாணியம்பாடி, ஜன.25

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம் பாடி அடுத்த பள்ளிப்பட்டு ஊராட்சி கீழ் பள்ளிப்பட்டு புதுமனை பகுதியில் பகுதி நேர நியாய விலை கடை வேண்டும் என்று 30 ஆண்டு காலமாக பொதுமக்க ளின் கோரிக்கையாக இருந்து வந்தது.

இதன் அடிப்படையில் நியாய விலை கடை அமைத்து தந்த தமிழக அரசுக்கும் இதற்கு முயற்சி எடுத்து அரசாணை கிடைக்க நடவடிக்கை மேற்கொண்ட ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஞானவே லன் ஆகியோருக்கு பகுதி மக்கள் நன்றி தெரிவித்தனர்.

மேலும்இதற்குஉறுதுணையாகஇருந்த வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம்.கதிர் ஆனந்த், திமுக மாவட்ட செய லாளரும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ. வில்வநாதன்,டேம் வெங்கடேசன் மற் றும் ஒன்றிய ஓட்டுனர் அணி செயலாளர் பள்ளிப்பட்டு செல்வராஜி ஆகியோர்க்கு ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் சார்பில் நன்றி தெரிவித்துள்ளார்.

நிகழ்ச்சியில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.பெருமாள், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஞானசேக ரன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை அருகே ஆலங்குடி செட்டிகுளக்கரை ஶ்ரீசிக்தி விநாயகர் திருக்கோவில் பாலாலயம் துவக்க விழா!

புதுக்கோட்டை,ஜன.25

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி செட்டிக்குளக்கரையில் ஶ்ரீசிக் தி விநாய கர்திருக்கோவில் பாலாலய துவக்க விழா நேற்று நடை பெற்றது. புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சந்தைப்பேட்டை அரு கில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஶ்ரீசிக்தி விநாயகர் திருக்கோ வில் பாலா லய விழாநடைபெற்றது.



இக்கோயில் தற்போது புனரமைப்பு செய்து கும்பாபிஷேகம் நடை பெறுவ தையொட்டி ஶ்ரீசக்தி விநாயகரின் சுவாமி பாலாலய விழா விற்கு ஆலங்குடி பேரு ராட்சி தலைவர் ராசி முருகானந்தம் சொர்ன பைரவ சிவாச்சாரியார்,கோவில் அறங்காவல் குழு தலைவர் தவ. பாஞ்சா லன் ஆகியோர் தலைமையிலும் ஊர் பொதுமக்கள் முன் னிலையில் பாலால யம் துவக்க விழா நடைபெற்றது.

ஆலங்குடி மற்றும் சுற்று வட்டார பொது மக்களால் அன்போடு அ ழைக்கப் படும் செட்டிகுள தென்கரை ஶ்ரீசித்தி விநாயகர் பிள்ளை யார் கோவில் உள் ளது. கோவில் சுமார் 100 ஆண்டுகளை கடந்து சிறப்பு வாய்ந்த ஶ்ரீ சித்தி விநாயகர் கோவிலாகும்.

இக்கோவில் தற்போது ஊர் மக்களால் ஒன்றுகூடி கோவில் புன மைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது இதனை தொடர்ந்து கோவி லில் பாலாலாய விழா நடந்தது. ஶ்ரீ சித்தி விநாயகர் சுவாமியை அருகில் உள்ள கல்கூடத்தில் வைத்து அர்ச்சனை மற்றும் பாலால ய அபிபிஷே கம் செய்து தீபாராதனை காட்டினார்கள்.

ஆகம விதிப்படி சகல பூஜைகள் நடை பெற்று பாலாலயம் செய்ய ப்பட்டது. கலந்து கொண்ட பக்தர்களும் பக்த கோடி களும் உபயதார ர்களும் மண்டகப்படிகா ரர்களும் நன்கொடையாளர்களும் துவக்க திருப்பணி விழாக்குழு உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப் பித்தனர்.

மேலும் விழாவில் சாமி அபிஷேகம் மற்றும் கலந்து கொண்ட அனைத்து பக் தர்களுக்கும் பொங்கல் பிராசாதம் வழங் கப்பட்டது. துவக்க விழாவில் ஊர் பொது மக்கள்திரளானோர்கலந்து கொண்டனர்.






# ORSL™ மற்றும் eRZL™ மூலம் முழுமையான ஹைட்ரேஷனை வலுப்படுத்தும் Kenvue!

சென்னை, ஜன.25



இந்தியாவில் நீரிழப்பு ஒரு முக்கிய பொது சுகாதார சவா லாக உருவெடுத்து வரும் நிலையில், Kenvue தனது ஹைட்ரேஷன் போர்ட்ஃ போலியோவை ORSL™ மற் றும் eRZL™ என்ற இரட்டை பிராண்டு தந்திரத்தின் மூலம் மேலும் வலுப்படுத்தியுள்ளது. ORSL™ என்பது W.H.O. பரிந்துரைத்த ORS சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு வயிற்றுப்போக்கு காரணமான நீரிழப்பை சரி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது. ஜனவரி 2026 முதல், eRZL™ தினசரி ஹைட்ரேஷன், சோர்வு மற்றும் லேசான முதல் நடுத்தர நீரிழப்பு நிலைகளில் உடல் மீட்பு பெற உதவும் எலக்ட்ரோலைட் பானமாக அறிமுகமாகியுள் ளது. புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட கலவையுடன் eRZL™ தண்ணீரை விட வேகமான ஹைட்ரேஷனை வழங்குகிறது.

இதில் 1.4 மடங்கு அதிக எலக்ட்ரோலைட்கள் மற்றும் 8 மடங்கு குறைந்த சர்க்கரை உள்ளதால், வெப்ப சோர்வு, தசை இழுக்குகள், பலவீனம் போன்ற நிலைகளில் பய னளிக்கிறது.

சோடியம், பொட்டாசியம், குளோரைடு, வைட்ட மின் C மற்றும் உண்மையான பழச்சாறு சேர்க்கப்பட்டுள் ளதால், இது தினசரி பயன்பாட்டிற்கு ஏற்ற சுவையான ஹைட்ரேஷன்தீர்வாக உள்ளது. Kenvue Indiaவின் மேனே ஜிங் டைரக்டர் மனிஷ் ஆனந்தானி, இந்த இரட்டை பிராண்டு தந்திரம் வயிற்றுப்போக்கு மற்றும் தினசரி ஹைட்ரேஷன் தேவைகளை ஒருங்கிணைத்து பூர்த்தி செய்கிறது என்றார்.

Self Care வணிகத் தலைவர் பிரஷாந்த் ஷிந்தே, குறைந்த சர்க்கரை மற்றும் ஆரோக்கியமான ஹைட்ரேஷன் தீர்வு களுக்கான நுகர்வோர் தேவை அதிகரித்து வருவதாகக் குறிப்பிட்டார். Medical & Safety Sciences தலைவர் டாக்டர் நிகில்பாங்கலே, தினசரிநீரிழப்பைபற்றியவிழிப்புணர்வு அதிகரிக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தினார்.



# தாராபுரத்தில் இலக்கியத் திருவிழா!

தாராபுரம், ஜன.25

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில்மகா ராணி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

சிறுவாணி இளைஞர் இலக்கியத் திரு விழா 2026 தமிழ்நாடு அரசு பொது நூலக இயக்ககம், திருப்பூர் மாவட்ட நூலக ஆணைக்குழு மற்றும் மகாராணி கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து இளைஞர் இலக்கியத் திருவிழாவை ஜன வரி 21,22 ஆகிய இரண்டு நாட்கள் நடை பெற்றது கல்லூரி மாணவிகளுக்கு இரண்டு நிமிட பேச்சுப்போட்டி, ஓவி யப்போட்டி, நூல் அறிமுகம் (தமிழ்), இலக்கிய வினாடி வினா, விவாத மேடை, உடனடி ஹைக்கூ, தொன்மையும் தொடர்ச்சியும் படத்தொகுப்பு, ஆறுநி மிட பேச்சுப்போட்டி, Book Review (English), Prompt Engineering ஆகிய பத்துப் போட்டிகள் நடைபெற்றது.

இந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட் டன. போட்டிகளின் ஒருங்கிணைப்பா ளர் தி.ரவிக்குமார் வரவேற்புரை ஆற்றி னார். கல்லூரி முதல்வர் முனைவர் சு. தமிழ்செல்வி வாழ்த்துரை வழங்கினார். செயலாளர் NAH சுலைமான் அவர்கள் சிறப்புரையாற்றி பரிசுகள் வழங்கினார்.

ஒவ்வொரு போட்டிக்கும் முதல் பரிசு ஐந்தாயிரமும் இரண்டாம் பரிசு நான்காயி ரமும் மூன்றாம்பரிசு மூவாயிரமும் ரொக் கப் பரிசுகளாக வழங்கப்பட்டது.

நிறைவாக குண்டடம் நூலகர் செ.பால ராஜசேகர் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் தாராபுரம் நூலகர் த. நாக ராஜன், நந்தவனம்பாளையம் நூலகர் அன்புகார்த்திகேயன், நஞ்சியம்பாளை யம் நூலகர் பிரியா, மடத்துப்பாளையம் நூலகர் கோபால், குமாரபாளையம் நூல கர் ரகுராமன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# போக்குவரத்து விபத்துகள் குறித்து கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு பேரணி!

தாராபுரம், ஜன.25

பேரணி தாராபுரம் சார்பு நீதிமன்ற வளா கத்தில் தாராபுரம் மூன்றாவது மாவட்ட கூடுதல் நீதிபதி சரவணன் கொடியசைத்து துவக்கப்பட்டது.தாராபுரம் வட்ட சட் டப் பணிகள் குழு தலைவரும் சார்பு நீதி பதியுமான சக்திவேல், மாவட்ட உரிமை யியல் நீதிபதி.பாண்டி மகாராஜா, குற்றவியல் நடுவர் உமா மகேஸ்வரி தாரா புரம் வழக்கறிஞர்கள் சங்க தலைவர் தென்னரசு, செயலாளர் சிவக்குமார், மூத்த வழக்கறிஞர்கள் கார்வேந்தன், மணிவண்ணன், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜா, காவல் துணைகாண்காணிப்பாளர்சுரேஷ்குமார், வட்டார போக்குவரத்து அலுவலர் பழனி யப்பன் ‘போக்குவரத்து காவல் ஆய்வா ளர்சஜினி வட்டார போக்குவரத்து வாகன ஆய்வாளர் சரவணக்குமார் அனைவரை யும் வரவேற்றார் 700 மேற்பட்ட தனியார் கல்லூரி மாணவ மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி.

நடைபயணம்மாக தாராபுரம்,காவல் துறையினர், ஊர் காவல் வீரர்கள், வட் டார போக்குவரத்து அலுவலக ஊழியர் கள் போன்றோர் தலைக் கவசம் அணிந் துச் இரு சக்கர வாகனங்களிலும் வாகன ஒட்டுநர் பயற்சி பள்ளியினர் நாள்கு சக்கர வாகனங்களில் சீட்பெல்ட் அணிந்தும் சென்றனர்.

பேரணியை துவங்கும் முன் நீதிபதிகள் சாலை பாதுகாப்பு மாணவர்,மாணவிகள் முன்பாக பற்றிய உறுதிமொழி ஏற்றனர். மேலும் நீதிபதி பேசுகையில் விபத்துக்களினால் ஏற்படும் வழக்குகள் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் பிர சுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட் டது பேரணி நீதிமன்ற வளாகத்தில் தொடங்கி கச்சேரி சாலை, பூக்கடை கார் னர் பொள்ளாச்சி ரோடு, பைபாஸ் சாலை வழியாக சென்று வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நிறைபெற்றது.

# டைசன் டீல்ஸ்: இந்த குடியரசு தினத்தில் யாராலும் கொடுக்க முடியாத அதிரடிச் சலுகைகள்!

சென்னை, ஜன.25




டைசன் குடியரசு தின ஸ்பெஷல் ஆஃபர்கள் 31 ஜனவரி 2026 வரை செல்லு படியாகும்.இந்தகுறிப்பிட்ட கால சலுகையில், வாடிக்கை யாளர்கள் ₹18,000 வரை சேமிக்க முடியும். பெர்பார் மன்ஸ் மற்றும் டிசைனிற்குப் பெயர் பெற்ற டைசனின் பிர பலமான ஹோம், பியூட்டி மற்றும் ஆடியோ புராடக்ட்டுகள் அனைத்தும் சிறப்பு விலையில் கிடைக்கின்றன. உங்கள் தேவைக்கேற்ப டெக்னாலஜி புராடக்ட்டுகளை தேர்வு செய்ய https://www.dyson.in/deals என்ற தளத்தைப் பார்வையிடலாம்.

ஹேர் கேர் பிரிவில், டைசன் Airwrap i.d.™ Multistyler & Dryer, Airwrap™ Origin, Airstrait™ Straightener, மற்றும் Supersonic™ Hair Dryer ஆகிய ஐகானிக் ஸ்டைலிங் கருவி கள் ஹீட் டேமேஜ் இல்லாமல் புரொஃபஷனல் ஸ்டைலிங்கை வழங்குகின்றன. திருமண சீசனில் தின சரி ஸ்டைலிங்கிற்கு உதவும் இந்த டூல்ஸ் இப்போது சிறப்பு விலையில் கிடைப்பது குறிப்பிடத்தக்கது. ஹோம் கேர் மற்றும் ஆடியோ பிரிவில், Dyson V8 Absolute, Dyson V12s Detect Slim Submarine™ Wet & Dry Vacuum Cleaner ஆகிய பவர்ஃபுல் வேக்யூம் கிளீனர்கள் உங்கள் வீட்டை தூசியற்ற மற்றும் ஆரோக்கியமான இடமாக வைத்தி ருக்க உதவுகின்றன. மேலும், Dyson OnTrac™ Headphones தெளிவான சவுண்ட் மற்றும் நாய்ஸ் கேன்சலேஷன் வச தியுடன் அன்றாட இசை அனுபவத்தை மேம்படுத்து கின்றன.



# புதுக்கோட்டை அருகே ஆலங்குடியில் கோவில் இடத்தில் வாடகை செலுத்தாத கடைக்கு ‘சீல்’அதிகாரிகள் நடவடிக்கை!

புதுக்கோட்டை ஜன.25

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங் குடியில் கோவில் இட த்தில் உள்ள வாடகை செலுத்தாத கடைக்கு அதிகா ரிக ள் 'சீல்' வைத்தனர். ஆலங்குடி வட காடு முக்கத்தில் நாடி யம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலின் தேரோடும் கீழவீதியில் தர்மர் கோவிலும் உள் ளது. இந்த கோவில்களுக்கு சொந்த மான இடங்களில் கடை கள் மற்றும் குடியிருப்பு வீடுகள் வாடகைக்கு விடப்பட்டு கோலில் அறங்காவல ர் கார்பில் வாடகை வசூல் செய் யப் பட்டு வருகிறது.

இதையடுத்து வாடகை தராத கடை வீடுகளில் உள்ளவ ர்களுக்கு புதுக் கோட்டை இந்து சமய அறநிலையத்து றை உதவிஆணையர் (பொறுப்பு) சுரேஷ். கடை,வீடுகளி ல் உள்ளவர் கள் என 6 பேருக்கு முன் னெச்சரிக்கை நட வடிக்கையாக கற்றறிக்கை நோட் டீஸ் பழங்கப்பட இத ற்கு கட்ட வில்லை. இதையடுத்து புதுக்கோட்டை இந்து சமய அறநி லைய த்துறை உத வி ஆணையர் பொறுப்பு) சுரேஷ தலைமை யில் ஆலங்குடி தாலுகா ஆலய நிலங்களின் தாசில்தார் வனிதா.

இந்து சமய அறநிலையத் துறை ஆய் வாளர் யசோதா, ஆலங்குடி வருவாய் ஆய்வாளர் தியாகராஜன் கோவில் பரம்பரை அறங்காவலர் மகிலன் ஆலங்குடி போலீசார் ஆகி யோர் முன் னிலையில் ஆலங்குடி நாடிய ம்மன் கோ வில் மற்றும் தர்மர் கோவில் பகு திகளில் வா டகை கட்டா த கடைகள் வீடுகளுக்கு சீல் வைக்கும் பணி நடை பெற்றது.

அப்போது 5 பேர் உடனடியாக பாக் கித் தொகையை கட் டினர் இதில் சித்த மருத்துவம் கடை வைத்து நடத்திவ ரும் தங்கராசு என்பவர் மட்டும் பாக்கி தொகை ரூ 45 ஆ யிரத்தை கட்டாமல் இருந்தார் இதையடுத்து அவரது கடைக்கு மட்டும் அதிகாரிகள் சீல் வைத்தனர். அப்போது ஆவுடையார் கோவில் ஆய்வாளர் ஜோதி அறந் தாங்கி வீரமாகாளியம்மன் கோவில் பேயாடிக் கோட்டை செயல் அலுலர் தேன்மொழி, ஆலங்கும். கிரா ம நிர் வாக அதிகாரி ராஜபாண்டி, மற்றும் உதவியாளர்க ள் கலந்து கொண்டனர்.



# புதுக்கோட்டை அருகே ஒன்றியம் சார்பில் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு ஊர்வலம்!

புதுக்கோட்டை,ஜன.25

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங் குடி அருகே உள்ள கொ த்தமங்கலம் ஊராட்சி மற்றும் திருவரங்குளம் ஒன் றியம் இணைந்து தேசிய வாக்காளர் தின உறுதிமொழியை ஏற்றுக் கொண்டு விழிப்புணர்வு ஊர்வலம் கொத்தமங் கலத்தில்நடைபெற்றது

வாக்காளர் தின விழிப்புணர்வு ஊர் வலத்திற்கு திருவ ரங்குளம் ஒன்றிய ஆணையர் (கி ஊராட்சிகள்) ரமேஷ் தலைமையேற்று ஊராட்சி மன்ற அலுவலகத்தில் தேசி ய வாக்காளர் தினத்தில் கொடியையசைத்து ஊர்வ லத் தை தொடங்கி வைத்தனர்.

தேசிய வாக்காளர் தினத்தையொட்டி திருவரங்குளம் திட்ட அலுவலர் அசோக்பாபு கொத் தமங்கலம் ஊராட்சி செயலர் தமிழ் வாணன் மற்றும் ஊராட்சி பணியா ளர் கள் முன்னிலையில் நடைபெற்றது.

ஊர்வலம் பிரதான சாலைகள் வழி யாக கொத்தமங்க லம் கடைத்தெருக் கள் மற்றும் பல்வேறு முக்கிய வீதிக ளின் வழியாக தேசிய வாக்காளர் தினத்தையொட்டி வா க்காளர் அவ சியம் குறித்தும்,

அதன் வாக்கு செலுத்த வேண்டிய தன் உரிமைகள் குறி த்தும் கோஷங் களை எழுப்பியவாறு பல்வேறு கடைத் தெருக்கள் வழியாக பதாகை களை ஏந்திக்கொண்டு கடைத்தெரு வில் நின்ற பொது மக்களிடம் துண்டு பிரசு ரங்களை வழங்கி மீண்டும் ஊராட்சிக்கு சென்றனர்.

ஊர்வலத்தில் பணித்தள பொறுப் பாளர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்கள் 100 நாள் பொறுப்பாளர்கள் ஊராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ஷிவ் நாடார் பல்கலைக்கழகம் சென்னை – 2026 இளங்கலை சேர்க்கை தொடக்கம்!

சென்னை, ஜன.25

SHIV NADAR UNIVERSITY

ஷிவ் நாடார் அறக்கட்ட ளையின் உயர்கல்வி முன்மு யற்சியாகவும், தமிழக அர சால் 90 ஆண்டுகளுக்குப் பிறகு சட்டம் இயற்றப்பட்ட முதல் மாநிலத் தனியார் பல் கலைக்கழகமாகவும் விளங்கும் ஷிவ் நாடார் பல்கலைக் கழகம் சென்னை, 2026–27 கல்வியாண்டிற்கான இளங் கலை படிப்புகளுக்கான விண்ணப்பங்களை அறிவித்துள்ளது. மாணவர்கள் 15 ஜனவரி 2026 முதல் https://www.snuchennai.edu.in/ugadmissions/ வழியாக ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். இடங்கள், தேர்வு முறை, பாடத்திட்டம், கல்வி உதவித்தொகை உள்ளிட்ட முழு விவரங்கள் இணையதளத்தில் வழங்கப்பட்டுள் ளன. எஸ்எஸ்என் பொறியியல் கல்லூரியின் கீழ் பி.டெக் பிரிவில் செயற்கை நுண்ணறிவு & தரவு அறிவியல், பயோமெடிக்கல், வேதியியல், சிவில், கணினி அறிவி யல், சைபர் செக்யூரிட்டி, இன்டர்நெட் ஆஃப் திங்ஸ், மின் & மின்னணுவியல், மின்னணுவியல் & தகவல் தொடர்பு, விஎல்எஸ்ஐ டிசைன் & டெக்னாலஜி, தகவல் தொழில்நுட்பம், இயந்திரப் பொறியியல் ஆகிய பாடப் பிரிவுகள் வழங்கப்படுகின்றன. வணிகம் & மேலாண் மைப் பள்ளியில் பி.காம், பி.காம் (புரொபஷனல் அக்க வுண்டிங்), ஸ்கூல் ஆஃப் சையன்ஸ் & ஹியுமேனிட்டிஸ் கீழ் பி.எஸ்சி பொருளாதாரம் (தரவு அறிவியல்), மற்றும் ஷிவ் நாடார் ஸ்கூல் ஆஃப் லா மூலம் ஒருங்கிணைந்த பி.ஏ., எல்.எல்.பி திட்டமும் வழங்கப்படுகிறது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 16வது தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் இரா.காயத்ரி, நகராட்சி ஆணையர் சேகர், கல்லூரி கல்வி இயக்கக மண்டல இணை இயக்குநர் ராமலட்சுமி, தருமபுரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மனோகர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லெ.லோகநாதன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஐ.ஜோதி சந்திரா, சர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் தே.சாந்தி, மாவட்ட தீயணைப்பு அலுவலர் செல்வி.ப.அம்பிகா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.



# தருமபுரி அரசு கலைக்கல்லூரி மாணவ மாணவிகள் சதுரங்கப் போட்டிகளில் சிறப்பிடம்!

தருமபுரி, ஜன.25

சேலம் பெரியார் பல்கலைக்கழக ஆளுகைக்கு உட்பட்ட கல்லூரிகளுக்கு இடையிலான ஆடவர் மற்றும் மகளிருக்கான சதுரங்கப் போட்டிகள் சேலம் வைசியா கல்லூரியில் 2101_2026 மற்றும் 22 01_2026 ஆகிய இரு நாட்களில் நடைபெற்றது.

20 க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து 100 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

இதில் தருமபுரி அரசு கலைக் கல்லூரி சதுரங்க விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் 6 பேர் கலந்து கொண்டனர்.

தனிநபர் சதுரங்க போட்டிகளில் மகளிர் பிரிவில் தருமபுரி அரசு கலைக் கல்லூரி கணிதவியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவி K.C கவியரசி மூன்றாம் இடம் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தார். குழு முதன்மையாளர் போட்டிகள் (டீம் சாம்பியன்ஷிப் ) சதுரங்க குழு முதன்மையாளர் போட்டிகளில் தருமபுரி அரசு கலைக் கல்லூரி மகளிர் சதுரங்க அணியினர் K.C கவியரசி கணிதவியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவி, G. சுமிதா கணிதவியல் துறை மூன்றாம் ஆண்டு மாணவி, G.சிவகாமி வேதியியல் துறை மூன்றாம் ஆண்டு மாணவி ஆகியோர் சிறப்பாக விளையாடி மகளிருக்காண குழு முதன்மையாளர் போட்டிகளில் இரண்டாம் இடம் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

மாணவர்கள் பிரிவில் J.R சத்யன் இயற்பியல் துறை மூன்றாம் ஆண்டு மாணவன், M.விஜய் பிரித்தன் முதுகலை ஆங்கிலத்துறைஇரண்டாம்ஆண்டுமாணவன் , P. அருண் ராஜ் கணிதவியல் துறை முதலாம் ஆண்டு மாணவன் ஆகியோர் சிறப்பாக விளையாடி ஆடவர் குழு முதன்மையான போட்டிகளில் மூன்றாம் இடம் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர். பாராட்டு சேலம் பெரியார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையிலான ஆடவர் மற்றும் மகளிர் குழு முதன்மையாளர் போட்டிகளில் இரண்டு இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களை வென்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளை கல்லூரி முதல்வர் கோ. கண்ணன் தகுதி சான்றிதழ்கள், வெற்றி கோப்பைகளை வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் உடற்கல்வி இயக்குனர் பாலமுருகன், துறை தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ , மாணவிகளுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர் .

அனைத்து துறை பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள், கௌரவ விரிவுரையாளர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், மாணவ , மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

## பெருந்துறை அருகே
# விடுதியில் பள்ளி மாணவன் தற்கொலை!
## உறவினர்கள் சாலைமறியல்!!

ஈரோடு, ஜன.25

ஈரோடுபெருந்துறை அருகே, மாவட்ட அரசுமாதிரி பள்ளியில் பள்ளியில் 11ஆம் வகுப்பு படித்து வந்த மாணவர் விடுதியில்தூக்கிட்டுதற்கொலைசெய்துகொண்டார்.சாவில் சந்தேகம் இருப்பதாக பெற்றோர் மற்றும் உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

ஈரோடு மாவட்டம், சிவகிரி, காந்திஜி வீதியைச் சேர்ந்தவர் முருகேஷ், நெசவுத் தொழிலாளி. இவரது மகன்கள் சந்தோஷ் (16), சஞ்சீவ்(16) (இரட்டையர்கள்). இவர்கள், பெருந்துறை, பழனிசாமி அறிவியல் கல்லூரி வளாகத்திலுள்ள, மாவட்ட அரசு மாதிரி பள்ளி விடுதியில் தங்கி 11 ஆம் வகுப்பு படித்து வந்தனர்.

இருவரும் வழக்கம்போல வியாழக்கிழமை காலை பள்ளிக்குச் சென்றனர். காலை 11 மணியளவில், சஞ்சீவ், தனது சகோதரனிடம் விடுதிக்கு செல்வதாக கூறிவிட்டு சென்றார். இதைத் தொடர்ந்து பக்கத்து அறையில் இருக்கும், மாணவர், பாடப் புத்தகத்தை எடுப்பதற்காக சென்றபோது, சஞ்சீவ் மின்விசிறியில் தூக்கிட்டு இறந்தது தெரியவந்தது.

தகவலின்பேரில் பெருந்துறை போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து சஞ்சீவ் உடலை மீட்டு பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கூறாய்வுக்காக அனுப்பிவைத்தனர்.

இந்த நிலையில் மாணவனின் தாயார் தனது மகனின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக கூறி போலீசில் புகார் அளித்தார். மேலும் அங்கு வந்த அவரது உறவினர்கள் மாணவனின் சடலத்தை வாங்க மறுத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முன்பு ரோட்டில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர் இதைத் தொடர்ந்து பெருந்துறை போலீஸ் டிஎஸ்பி வசந்தராஜ், இன்ஸ்பெக்டர்கள் பாலமுருகன் ஜெகநாதன் ஆகியோர் மறியலில் ஈடுபட்டியிடம் பேச்சுவார்த்தை நடத்தினர் பேச்சுவார்த்தையில் உடன்பாடாத நிலையில்சாலை மறியல் ஈடுபட்ட 20க்கும் மேற்பட்டவர்களை கைது செய்தனர்.அதன் பின்னர் மாணவரின்பெற்றோர்கள் சடலத்தை வாங்க சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்தனர்.

மேலும் இது குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# கோபிஅருகே மின் வயர் அறுந்து விழுந்ததில் பசு உயிரிழப்பு!

கோபி ஜன .25

கோபி அருகே உக்க ரம் விஜயபுரத்தை சேர்ந்தவர் மவுலீஸ்வரன் (25). இவர், ஈரோடு மாவட்ட சுகாதா ரத் துறை அலுவலகத்தில் குளிர்சாதன தொழில் நுட்ப பிரிவு ஊழியராக வேலை செய்து வந்தார். வீட்டின் அருகே உள்ள மாட்டு கொட்டகையில் கட்டி வைக்கப்பட்டு இருந்த பசு, மின் சார வயர் அறுந்து விழுந்ததில் உயிர் இழந்துகிடந்ததைஅறியாமல்,பசுவை தொட்டு உள்ளார்.

அப்போது மவுலீசுவர னையும் மின் சாரம் தாக் கியது.

இதில் தூக்கி வீசப் பட்ட மவுலீசுவரனின் அலறல் சத்தம் கேட்டு அருகில் இருந்தவர் கள், அவரை மீட்டு சத்திய மங்கலத்தில் உள்ள தனி யார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், வழியிலேயே மவுலீசுவரன் உயிரிழந் தார்.

இதுகுறித்து கடத்தூர் போலீசார் வழக்கு பதிவு. செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழ்நாடு அரசின் மோபிலிட்டி திட்டத்தில் முன்னணி வாழ்வாதார பங்குதாரராக உயர்ந்த ராபிடோ!

சென்னை, ஜன.25

தமிழ்நாடு அரசு நடத்தும் "தமிழ்நாடு ஜிக் தொழிலாளர் நல வாரியம்" ஸ்கீம் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பயனாளர்களில் 76 பேர் ராபிடோ கேப்டன்கள் என்பதும், மாநிலம் முழுவதும் ஜிக் தொழிலாளர்களுக்கான முக்கிய வாழ்வாதார கூட்டாளியாக ராபிடோ திகழ்கிறது என்பதையும் வெளிப்படுத்துகிறது. சென்னை நிகழ்ச்சியில், ராபிடோ பைக் பிங்க் ஓட்டுநர் லவன்யா S அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் மு.க. ஸ்டாலின் வாகன சாவி வழங்கியது, பெண்கள் வழிநடத்தும் மோபிலிட்டிக்கு ஒரு முக்கிய அடையாளமாக அமைந்தது.

ராபிடோ இணை நிறுவனர் பவன் குந்துபள்ளி, தள ஓட்டுநர்களுக்கு பாதுகாப்பான, மதிப்புக்குரிய மற்றும் நிலையான வருமான வாய்ப்புகளை உருவாக்குவதே நிறுவனத்தின் நோக்கம் என தெரிவித்தார். பாரம்பரிய தடைகளை சந்திக்கும் குழுக்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குவது ராபிடோவின் முன்னுரிமை என்றும், குறிப்பாக ராபிடோ பைக் பிங்க் பெண்கள் ஓட்டுநர்களின் அதிகரிக்கும் பங்கேற்பு, இணைந்த மோபிலிட்டி சூழலை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகிறது என்றும் கூறினார்.

தமிழ்நாட்டில் ராபிடோ 40க்கும் மேற்பட்ட நகரங்களில் மாதத்திற்கு 2 லட்சம் செயலில் உள்ள ஓட்டுநர்களுடன் தினசரி 2.75 லட்சம் பைக் பயணங்களை மேற்கொள்கிறது. பைக் பிங்க் திட்டத்தின் கீழ் 3,000+ பெண்கள் ஓட்டுநர்கள் தினசரி சுமார் 6,000 பயணங்களை நிறைவேற்றி வருகின்றனர். லவன்யா S, இது வரை 2,555 பயணங்களை முடித்து தினசரி ₹2,000 வரை சம்பாதித்து, தனது குடும்ப செலவுகளை சமாளித்து வருவதாக பகிர்ந்து கொண்டார்.

# சேலம் குளோபல் மெடிக்கல் சென்டரில் அப்போலோ நவீன டயாலிசிஸ் மையம் திறப்பு!

சேலம், ஜன.25

இந்தியாவின் நம்பகத்தன்மை பெற்ற முன்னணி டயாலிசிஸ் சிகிச்சை நிறுவனமான அப்போலோ டயாலிசிஸ் கிளினிக்ஸ், சேலம் குளோபல் மெடிக்கல் சென்டர் & மருத்துவமனையில் 10 படுக்கைகள் கொண்ட நவீன டயாலிசிஸ் மையத்தைத் தொடங்கியுள்ளது. உலகத் தரத்திலான டயாலிசிஸ் இயந்திரங்கள், கடுமையான தொற்று கட்டுப்பாட்டு நடைமுறைகள் மற்றும் பயிற்சி பெற்ற மருத்துவக் குழுவுடன் செயல்படும் இந்த மையம், சேலம் மற்றும் சுற்றுப்புற நோயாளிகளுக்கு பாதுகாப்பான, செலவுக்கேற்ற சிறுநீரக சிகிச்சையை எளிதாகக் கிடைக்கச் செய்கிறது. இந்த வசதி குளோபல் மெடிக்கல் சென்டரின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஞானசேகரன், *MS, FRCS (Ed), Dip Urology (London)* அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் அப்போலோ டயாலிசிஸ் கிளினிக்ஸின் முதன்மை செயல்பாட்டு அதிகாரி எம். சுதாகர ராவ் மற்றும் மூத்த சிறுநீரக நிபுணர் டாக்டர் ஆர். அசோக் குமார், MD, DNB (Medicine), DM ஆகியோர் கலந்து கொண்டனர்.

எம். சுதாகர ராவ், டாக்டர் டி. ஞானசேகரன் மற்றும் டாக்டர் ஆர். அசோக் குமார் ஆகியோர், இந்த கூட்டாண்மை மூலம் நெப்ராலஜிஸ்ட் மேற்பார்வையில் உயர்தர ஹீமோடயாலிசிஸ், அரசு சுகாதார காப்பீட்டு திட்டங்களின் கீழ் அணுகல், மற்றும் நோயாளி மையமான பாதுகாப்பான சிகிச்சை சேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்படுவதால், சேலம் பகுதி மக்களுக்கு உலகத் தரத்திலான சிறுநீரக பராமரிப்பு மேலும் எளிதாக கிடைக்கும் என தெரிவித்தனர்.

# திருமுண்டீச்சரம் கிராமத்தில் தெரு நாய்கள் தொல்லை!

திருவெண்ணெய்நல்லூர், ஜன.25

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியம் திருமுண்டீச்சரம் கிராமத்தில் தெரு நாய்கள் தொல்லை அதிகமாக உள்ளது கடந்த மூன்று மாதத்தில் 20க்கும் மேற்பட்ட நபர்களை கடித்துள்ளது இந்த சம்பவத்தால் அப்பகுதியில் மக்களிடையே பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது (குறிப்பாக நடுத்தெருவில்) இதனால் அந்த தெருவில் மக்கள் நடமாடுவது அச்சமாக உள்ளது இதனை அதிகாரிகள் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள்.

# இந்தியாவில் அடுத்த தலைமுறை GCCகளுக்காக லெனோவோ முழுமையான தீர்வை அறிமுகப்படுத்தியது!

சென்னை, ஜன.25



*Lenovo*, இந்தியாவின் *1600+ Global Capability Centers (GCCs)* க்காக AIஆல் இயக்கப்படும் முழுமையான உள்க ட்டமைப்பு, சேவை கள் மற்றும் கட்டமைப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. GCCகள் டிஜிட்டல் மாற்றத்திலிருந்து டிஜிட்டல் ஒருங்கிணைப்புக்குச் செல்லும் நிலையில், எட்ஜ் முதல் கிளவுட் வரை பாதுகாப்பான, அளவுபடுத்தக்கூடிய மற்றும் திறம்பட ஒழுங்குபடுத்தப்பட்ட ஹைப்ரிட் AI ஸ்டாக்கை *Lenovo* வழங்குகிறது. சமீபத்திய ஆய்வின் படி, AI வளர்ச்சி, நவீன உள்கட்டமைப்பு, பணியாளர் செயல்திறன், பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகியவை GCCகளின்முக்கியமுன்னுரிமைகளாகஉள்ளன;இதற்கேற்ற தீர்வுகளை *Lenovo India* வழங்கி தெளிவான ROIஐ உருவாக்குகிறது. *TruScale* இன்நெகிழ்வானபயன்பாட்டு மாதிரி மூலம், பெரிய முதலீடு இன்றி AI உள்கட்டமைப்பை விரைவாக அமைக்க *Lenovo* உதவுகிறது. உலகின் நம்பகமான உள்கட்டமைப்பு, நிரூபிக்கப்பட்ட கட்டமைப்புகள் மற்றும் வலுவான எகோசிஸ்டம் இணக்கத்துடன், AI, கிளவுட் மற்றும் *legacy* அமைப்புகள் தடையின்றி இணைந்து செயல்படக்கூடிய முழுமையான ஹைப்ரிட் AI சூழலை இது உருவாக்குகிறது. மேலும், சாதனங்கள், உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள் அனைத்திலும் AIஐ ஒருங்கிணைத்து பணியாளர் செயல்திறனை *Lenovo* மேம்படுத்துகிறது.ஹார்ட்வேர் முதல் பிளாட்ஃபாம் வரைபாதுகாப்பாகவடிவமைக்கப்பட்டகட்டமைப்பின் மூலம், GCC விதிமுறைகள் மற்றும் பாதுகாப்பு தேவைகளை *Lenovo* பூர்த்தி செய்கிறது. *Neptune™* திரவ குளிர்ப்பு போன்ற எரிசக்தி குறைந்த தீர்வுகள் மூலம் நிலைத்தAIபணிச்சுமைகளைஆதரிக்கிறது;அதேசமயம், தரவு பாதுகாப்பு, உலகளாவிய மற்றும் இந்திய ஆதரவு சேவைகள், மற்றும்ESG இலக்குகளை ஆதரிக்கும் ஆயுள் மற்றும் நிலைத்திறன் சேவைகளையும் வழங்குகிறது.



பொள்ளாச்சி நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார்க.கிரியப்பனவர் மாணவியர்களின்கற்றல்திறன்குறித்து நேரில்பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் பொள்ளாச்சி சார் ஆட்சியர் ராமகிருஷ்ணசாமி நகராட்சி, ஆணையாளர் ந.குமரன், நகராட்சி பொறியாளர் ஆறுமுகம் ஆகியோர் உள்ளனர்.

# உடுமலையில் குரங்கு அட்டகாசம்; பொதுமக்கள் அவதி!

உடுமலை,ஜன.25–

உடுமலை அடிவாரப் பகுதியில் ஏராளமான குரங்குகள் உள்ளன அவை இரை தேடியும் உணவுக்காகவும் கிராம பகுதிகளுக்கு வந்துவிடுகிறது. வாடிக்கையாக உள்ளது பின்னர் திரும்பிச் செல்லவழிதெரியாமல் ஆக்ரோசத்துடன் சுற்றி வந்து பொதுமக்களை அச்சுறுத்தவதும் அரங்கேறி வருகிறது.

இந்நிலையில் வனப்பகுதியில் இருந்து வெளியேறிய குரங்கு வந்து உடுமலை நகரப் பகுதிகளில் உலா வந்தது. இதைப் பார்த்த கடை உரிமையாளர்கள் வாகன ஓட்டிகள் பொதுமக்கள் அச்சமடைந்தனர். அந்தக் குரங்கு கடை மற்றும்வீடுகளுக்குள்புகுந்துஅட்டகாசம் செய்தது பிறந்த பகுதியிலேயே சுற்றி வருகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் அவதி அடைந்தனர். எனவே சுற்றி திரியும் குரங்கை கூண்டு வைத்து



பிடித்து வனப்பகுதிக்குள்விட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மகன், 2 வயது குழந்தையுடன் இளம்பெண் மாயம்!

சங்கராபுரம், ஜன.25–

சங்கராபுரம் அருகே பெண் இரண்டு குழந்தைகளுடன் மாயமான பெண்ணை – போலீசார் தேடி வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் அருகே உள்ள ரங்கப்பனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ஏழுமலை. இவரது மனைவி அம்பிகா (வயது 30). இவர்களுக்கு பர்தேஷ் (வயது 8), கவினேஷ் (வயது 2) என இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

கடந்த 17ஆம் தேதி மேல்மருவத்தூர் கோவிலுக்கு சென்று வீடு திரும்பிய அம்பிகாவை, அவரது கணவர் உள்ளிட்ட குடும்பத்தினர் திட்டியதாக கூறப்படுகிறது.

இதனால் மனமுடைந்த அம்பிகா, வீட்டிலிருந்து இரண்டு குழந்தைகளையும்அழைத்துக்கொண்டுவெளியே சென்றுள்ளார். அதன் பின்னர் அவர்



வீடு திரும்பவில்லை.

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் பல்வேறு இடங்களில் தேடியும் அம்பிகா மற்றும் குழந்தைகள் எவரும் கிடைக்காததால், அம்பிகாவின் தாய் மீனா வடபொன்பரப்பி காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து, காணாமல் போன அம்பிகா மற்றும் இரண்டுகுழந்தைகளையும் தீவிரமாக தேடி வருகின்றனர்.

## வீர விளையாட்டுக்கு ஊக்குவிப்பு:
# ஜல்லிக்கட்டுப் போட்டி விதிமுறைகளில் தளர்வுகள்; தமிழக அரசு அறிக்கை!

சென்னை, ஜன.25

பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுப் போட்டியை ஊக்குவிக்கும் வகையில் விதிமுறைகளில் சில தளர்வுகளை தமிழக அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக அரசு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாட்டில் பாரம்பரிய வீரவிளையாட்டான ஏறுதழுவுதல் என்னும் ஜல்லிக்கட்டு நடத்துவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. ஜல்லிக்கட்டுக்காகவே மதுரை அலங்காநல்லூரில் "கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்" அமைக்கப்பட்டு அனைவரும் பெருமைகொள்ளும் வகையில் அங்கே ஜல்லிக்கட்டு நடைபெற்று வருகிறது.

17.01.2026 அன்று அலங்காநல்லூர் பகுதியில் நடைபெற்ற ஏறுதழுவுதல் போட்டியை பார்வையிட்ட பின் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் பங்கு பெற்று அதிகக் காளைகளை அடக்கிச் சிறந்து விளங்கக்கூடிய வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கால்நடை பராமரிப்புத் துறையில் உரிய அரசுப் பணியிடங்களில் பணியமர்த்திட வழிவகை செய்யப்படும் என்றும், உலகப் புகழ் பெற்ற தமிழ்நாட்டின் ஜல்லிக்கட்டுக் காளைகளுக்கான சிறந்த உயர்தர சிகிச்சை மற்றும் பயிற்சி மையம் 2 கோடி ரூபாய் செலவில் அலங்காநல்லூர் பகுதியில் அமைக்கப்படும் என்றும் இரண்டு சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டார்.

மேலும், ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்துவதில் இருக்கும் ஒரு சில சிரமங்கள் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து அவற்றைப் பரிசீலித்து காளைகளுக்கு எவ்வித துன்பமும் நேராவண்ணமும், ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கு இடையூறு இல்லாத வண்ணமும் தமிழ்நாடு அரசு சில தளர்வுகளை வழங்கிட நடவடிக்கை எடுத்துள்ளது.

உள்ளூர் காளைகளும், வீரர்களும் பங்கு பெறுவதை உறுதி செய்திட ஏதுவாக, ஆன்லைன் பதிவு முறையினை மாற்றி, அந்தந்த மாவட்ட அளவில் முடிவு செய்துகொள்ள வழிவகை செய்யப்படும்.

போட்டிகளின் போது இறக்க நேரிடும் மாடுபிடி வீரர்களுக்கு உரிய நிவாரணம் அரசு சார்பில் வழங்கப்படுகிறது. எனவே, மாடுபிடி வீரர்களுக்கு ஆயுள் காப்பீடு கட்டாயம் என்ற விதி தளர்த்தப்படும். இது வரை ஜல்லிக்கட்டு போட்டி நடத்துபவர்களிடம் முத்திரைத் தாளில் பெறப்பட்டு வந்த உறுதிமொழிப் பத்திரம் என்ற நடைமுறை ரத்து செய்யப்படும்.

தமிழ்நாட்டின் பாரம்பரியத்தைக் காப்பதிலும், ஜல்லிக்கட்டு விளையாட்டினைத் தொடர்ந்து ஊக்குவித்திடவும், தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படும். இவ்வாறு தமிழக அரசு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# உடுமலை மாரியம்மன் கோவில் திருவிழா ஆலோசனை கூட்டம்!

உடுமலை,ஜன.25–

உடுமலை மாரியம்மன் கோவில் தேர் திருவிழாவுக்கான ஆலோசனை கூட்டம் வரும் 28ஆம் தேதி கோவிலில் நடைபெற உள்ளது.

உடுமலை நகரில் உள்ள மாரியம்மன் கோவில் தேர் திருவிழா ஆண்டு தோறும் விமர்சியாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு திருவிழாவுக்கு வரும் மார்ச் 23ல் நோன்பு சாற்றப்பட்டு மார்ச் 31 ல் கம்பம் போடுதல் நிகழ்ச்சியும் ஏப்ரல் 9ல் திருத்தேரோட்டம் நடத்ததீர்மானிக்கப்பட்டுள்ளதுதிருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் செய்வதற்கான ஆலோசனை கூட்டம் வரும் 28ஆம் தேதி மாலை 5 மணிக்கு கோவிலில் நடைபெறும் என கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு

# திருப்பத்தூர் ஆட்சியர் வளாகத்தில் 16-வது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

## ஆட்சியர் சிவசௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது!!



திருப்பத்தூர்,ஜன.25

திருப்பத்தூர் மாவட்டம் ஆட்சியர்.அலுவலகம்.எனது இந்தியா எனது வாக்கு என்ற கருப்பொருளிலும் இந்திய ஜனநாயகத்தின் இதயத்தில் இந்திய குடிமகன் என்ற வாசகத்தின் அடிப்படையில் 16 வது தேசிய வாக்காளர் தினம் ஜனவரி 25 அன்று கொண்டாடப்பட உள்ளது . அதனடிப்படையில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு வாக்காளர் விழிப்புணர்வுநிகழ்ச்சிமாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது. தேசிய மாணவர் படையை சேர்ந்த சுமார் 150 மாணவர்கள் பங்குபெற்ற , வாக்களிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர்கொடிஅசைத்து துவக்கி வைத்தார். வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் எழுதிய படி மாணவர்கள் பேரணியில் பங்கு பெற்றனர். மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் துவங்கிய பேரணி தூய நெஞ்ச கல்லூரி வரை சென்று நிறைவடைந்தது.

தொடர்ந்து மகளிர் சுய உதவிக் குழு பெண்கள் ஒன்றிணைந்து தேசிய வாக்காளர் தினம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வரைந்த கோலங்களை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து இளம் வாக்காளர்கள் மூத்த வாக்காளர்கள் மூன்றாம் பாலின வாக்காளர்கள் என பல்வேறு தரப்பு வாக்காளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் வாக்காளர் தின உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜலட்சுமி மற்றும்துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பங்கு பெற்றனர்.



தேசிய வாக்காளர் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு, சேலம் வின்செண்ட் பகுதியில் அமைந்துள்ள அரசு இருபாலர் கல்லூரியில், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் பிருந்தா தேவி தலைமையில், தேசிய வாக்காளர் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பேரணியில் தகுதியுள்ள வாக்காளர்கள் அனைவரும் வாக்களிப்பதன் அவசியம் குறித்த பதாகைகளை கையில் ஏந்தி மாணவ மாணவிகள் ஊர்வலம் சென்றனர். பின்னர் கல்லூரியின் நுழைவாயிலில், ஆட்சியர் பிருந்தா தேவி தலைமையில், சேலம் மாநகராட்சி ஆணையர் டாக்டர் இளங்கோவன், அரசு கலைக் கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள், உள்ளிட்ட ஏராளமான அரசு அதிகாரிகள், 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் உள்ளிட்டோர். தேசிய வாக்காளர் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு உறுதிமொழி ஏற்றனர். பின்னர் இந்தப் பேரணி அரசு கலைக் கல்லூரியில் இருந்து தொடங்கி, புவனேஸ்வரர் திருக்கோவில் வழியாக, ஆட்சியர் அலுவலகம் வரை சென்று நிறைவடைந்தது.

## ஆம்பூர் நகராட்சி சார்பில் புதியதாக கட்டப்பட்ட கழிவறைகளை மன்ற தலைவர் ஏஜாஸ் அஹ்மத் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்



ஆம்பூர். ஜன.25

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் நகராட்சி 32 வது வார்டு சானாங்குப்பம் ஏரிக்கரை பகுதியில் புதியதாக கட்டப்பட்ட கழிவறைகளை நகர மன்ற தலைவர் பத்தேகான் ஏஜாஸ் அஹமத் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

பின்னர்சானாங்குப்பம் மெயின் ரோடு பகுதியில் புதியதாக கட்டப்படவுள்ள கால்வாய் அடிக்கல் நாட்டி 32 வது வார்டு பகுதியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு சீருடைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையாளர் ஏ.முத்துசாமி, 32 வது வார்டு உறுப்பினர் சாந்தகுமாரி விஜியன், பொறியாளர்,இளநிலை பொறியாளர் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



## கிருஷ்ணகிரி மாவட்ட

# நலப்பணிகள் இணை புதிய இயக்குநர் மத்தூர் அரசு மருத்துவமனையில் ஆய்வு!

கிருஷ்ணகிரி,ஜன.25

கிருஷ்ணகிரி மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநராக புதியதாக பதவியேற்றுள்ள மரு.மு.மோகனபானு, MBBS,DCH ., மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் 23.01.2026 இன்று மத்தூர் அரசு மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டு நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை விவரங்களை ஆய்வு செய்தார்.

மேலும் மருத்துவர்கள், செவிலியர்கள், மற்றும் பணியாளர்களின் வருகை குறித்தும் திடீர் ஆய்வு மேற்கொண்டார். மருத்துவமனையில் கட்டமைப்பு பணிகள் குறித்தும், நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் உணவின் தரம் குறித்தும் ஆய்வும் செய்தார். இம்மாவட்டத்தில் ஏழை, எளிய மக்களுக்கு அரசு மருத்துவமனைகள் மூலம் உரிய நேரத்தில் தரமான சிகிச்சை வழங்கிடவும், பிரசவத்தின்போது ஏற்படக்கூடிய தாய் ,சேய் மகப்பேறு இறப்பினை தடுத்திடவும், மருத்துவமனைகளில் நோயாளிகளின் நலனுக்காக ஒதுக்கப்படும் நிதியை முழுவதுமாக பயன்படுத்திட உரிய நடவடிக்கை வேண்டும் எனவும் , மருத்துவமனை வளாகத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் எனவும் மத்தூர் அரசு மருத்துவமனையின் முதன்மை மருத்துவர் அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

அரசு மருத்துவமனைகள் மூலம் வழங்கப்படும் உயிர்காக்கும் உயர்தர சிகிச்சைகள் மாண்புமிகு முதலமைச்சர் விரிவான காப்பீடு திட்டம் மூலமாகவும், இன்னுயிர் காக்கும் திட்டம் ( IK 48) திட்டம் மூலமாகவும் உயரிய அறுவை சிகிச்சைகள் மற்றும் இலவச காதுகேட்கும் கருவிகளை நோயாளிகள் இலவசமாக பெற்று

பயன்பெற வேண்டும் எனவும் அறிவுறுத்தியிருக்கிறார். இம்மாவட்டத்தில் இயங்கும் அரசு மருத்துவமனைகள் தங்களது மருத்துவமனையில் உள்ள பல இலட்சம் மதிப்பிலான உயிர் காக்கும் அனைத்து மருத்துவ உபகரணங்களை உடனடியாக பயன்பாட்டுக்கு கொண்டுவந்து உயர்சிகிச்சை வழங்கிடவும், தரமான மருத்துவ சேவைகளை உரிய நேரத்தில் நோயாளிகளுக்கு வழங்கிட பாடுபட வேண்டும் என்று அனைத்து மருத்துவ அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கியுள்ளார்.

# ஓசூர் காளேகுண்டா குளம் சுத்திகரிப்பு!

## மாநகராட்சி ஆணையர் அதிரடி!!

ஓசூர், ஜன 25

ஓசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 26 காளேகுண்டா பகுதியினை 19.01.2026 அன்று மாநகராட்சி ஆணையாளர் முகமது சபீர் ஆலம், மாமன்ற உறுப்பினர் மற்றும் மாநகராட்சி அலுவலர்களுடன் நேரடி கள ஆய்வு மேற்கொண்ட பொழுது அப்பகுதியில்



உள்ள குளத்தில் குப்பைகள் மற்றும் அடர்த்தியான செடி, கொடிகள் இருந்ததை கண்ட ஆணையரிடம், அந்த பகுதி மாமன்ற உறுப்பினர் குளத்தை சுத்தம் செய்ய. கோரிக்கை வைத்தார்.

அவருடைய கோரிக்கையின்படி ஆணையரின் உத்தரவின் பேரில் துப்புரவு அலுவலர் சி.அன்பழகன், துப்புரவு ஆய்வாளர் எஸ்.திவாகர் மற்றும் மேற்பார்வையாளர் கே.வெங்கடேசன் தலைமையில் தூய்மை பணியாளர்கள் அடங்கிய குழுவானது கடந்த மூன்று நாட்களில் அக்குளத்தினை முழுமையான முறையில் சுத்தப்படுத்தியதோடு. அப்பகுதியில் உள்ள கால்வாய்கள் தூர்வாரப்பட்டு தேங்கிய குப்பைகள் முழுமையாக அகற்றப்பட்டு. கொசு புகை மருந்து அடிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் அப்பகுதியில் குப்பைகள் தேங்கா வண்ணம் ஒவ்வொரு வீடுகளிலும் தூய்மை பரப்புரையாளர்களை கொண்டு வீடுகள்தோறும் நோட்டீஸ் வழங்கப்பட்டு தூய்மை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## கல்வராயன்மலை அருகே

# சாராய வியாபாரி மீது குண்டர் சட்டம் பாய்ந்தது!

கள்ளக்குறிச்சி,ஜன.25

கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை வட்டம், வெள்ளரிக்காடு கிராமத்தைச் சேர்ந்த ஆண்டி மகன் ராமன் (40)



என்பவர் கடந்த 04/01/2026ந் தேதி அன்று அவரது காட்டின் அருகே உள்ள ஓடையில் 10 லிட்டர் கள்ளச்சாராயத்தை விற்பனைக்காக மறைத்து வைத்திருத்த போது கரியலூர் காவல் துறையினரால் கையும் களவுமாக கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

மேற்கண்ட குற்றச் சம்பவத்தில் ஈடுபட்ட ராமன் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட கள்ளச்சாராயம் விற்பனைசெய்யும் குற்றத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளார்என்பது தெரியவந்தது.ராமன் மீது கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கள்ளச்சாராயம் விற்பனை செய்த பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளது. இவர் தொடர்ந்து இது போன்று மதுவிலக்கு குற்ற செயல்களில் ஈடுபட்டு வருவதால் இவரது நடவடிக்கையை கட்டுப்படுத்தும் பொருட்டு, கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த் பரிந்துரையின் பேரில், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் மேற்படி நபரை ஓராண்டு குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தில் சிறையில் அடைக்க உத்தரவு பிறப்பித்தார். அதன்படி ராமன் கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.



# சேலம் ஸ்ரீ கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோவிலில் சிறப்பு அபிஷேகம்!

சேலம்,ஜன.25

சேலம் மாவட்டம் முதல் அக்ரஹார பகுதியில் எழுந்தருளியிருக்கும், சேலத்து செல்ல மகாராணி என்று பக்தர்களால் அழைக்கப்படுகின்ற, சேலத்தின் காக்கும் தெய்வம், அருள்மிகு ஸ்ரீ கோட்டை பெரிய மாரியம்மன் திருக்கோவிலில், தை மாத இரண்டாம் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு, ஸ்ரீ கோட்டை மாரியம்மனுக்கு, சிறப்பு அபிஷேகமாக மஞ்சள், திருமஞ்சனம், சந்தனம், குங்குமம், திருநீறு, ஜவ்வாது, பால், தயிர், தேன், கரும்புச்சாறு, இளநீர், பஞ்சாமிர்தம், வெட்டிவேர், நெய், உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவிய பொருட்களால் அம்மனுக்கு அபிஷேகம் செய்து, வாசனை வண்ண மலர்கள் கொண்டு அலங்கரித்து, பச்சை வண்ண பட்டாடை உடுத்தி, எலுமிச்சை பழ மாலை அணிந்து, பக்தர்களுக்கு அம்மன் காட்சியளித்தார். பின்னர் சேலம் பிரபல தொழிலதிபர் ஜெயரத்னா திருமண மண்டப உரிமையாளரும், ஜெயரத்னா மியூசிக்கல் உரிமையாளர் ஜெயரத்னாவின் தலைமையில், பக்தி இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் அந்நிறுவனத்தின் உரிமையாளர் தங்களது திருமண நாளை முன்னிட்டு, கோட்டை மாரியம்மன் கோவிலில் தங்க தேர் இழுக்கும் வைபவம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கிருத்திகா, தேதஸ் ஸ்ரீ, தக்ஷிதா, திருமதி. லீலா ஜெயக்குமார், திருமதி. சாந்தி ராஜா, திருமதி. மலர்விழி ராஜா, கோவில் அறங்காவல் குழு தலைவர் எஸ். டி. என். சக்திவேல், சக்திவேல் செல்வி, லட்சுமி நரசிம்ம பெருமாள் கோவில் அறங்காவல் குழு தலைவர் ரமேஷ் பாபு, சேலம் ஆன்மீக செம்மலும், ஸ்ரீ ஐயப்பா ஆசிரம நிறுவனருமான பாலசுந்தரம், உள்ளிட்ட 300க்கும் மேற்பட்ட பக்தர்கள் இந்த தங்கத்தில் இருக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு, தங்க தேர் இழுத்து, அருள்மிகு ஸ்ரீ கோட்டை பெரிய மாரியம்மன் அருளை பெற்றனர்.



# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 14 இருச்சக்கர ரோந்து திட்டம்!

## மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தொடங்கி வைத்தார்!!

கிருஷ்ணகிரி,ஜன.25

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொதுமக்களின் செய்வதற்காகவும், அவசர அழைப்பு எண் 100 தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு காணும் நோக்கத்துடனும், 14 இருச்சக்கர ரோந்து திட்டம் (24x7) ஊத்தங்கரை. சிங்காரப்பேட்டை, பர்கூர், கிருஷ்ணகிரி நகரம், கிருஷ்ணகிரி தாலுக்கா, காவேரிப்பட்டணம், ஓசூர் நகரம், அட்கோ. சிப்காட், சூளகிரி, தேன்கனிக்கோட்டை மற்றும் இராயக்கோட்டை ஆகிய காவல் நிலைய எல்லைகளில் தினமும் 24 மணி நேரமும் 23.01.2026ம் தேதி முதல் காவல் துறை தலைவர், மேற்கு மண்டலம், கோவை அவர்களின் உத்தரவின் பேரில், மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் தொடங்கி வைக்கப்பட்டது.

இத்திட்டதின் மூலம் 100 அவசர அழைப்புகள், பெண்கள் பாதுகாப்பு, விபத்து, திருட்டு, சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்துதல் மற்றும் பொது மக்களின் புகார்களுக்கு உடனடி நடவடிக்கை எடுப்பது ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. பொதுமக்கள் அளிக்கும் 100 அவசர அழைப்புகளுக்கு குறுகிய நேரத்தில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் பள்ளிகள், கல்லூரிகள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள். சந்தைகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் குற்றச் சம்பவங்கள் நடைபெறாத வண்ணம் 24x7 இருசக்கர ரோந்து திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் காவல் துறைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, சட்டம் மற்றும் ஒழுங்கை பேணுவதற்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.



# சேலம் மாநகர் மாவட்ட அதிமுக அம்மா பேரவை சார்பில் திண்ணைப் பிரச்சாரம்!

சேலம்,ஜன.25

சேலம் மாநகர் மாவட்ட அதிமுக அம்மா பேரவை சார்பில், ஐம்பதாவது வாரமாக, நேற்று மாபெரும் திண்ணைப் பிரச்சாரம் நடைபெற்றது. இந்தப் பிரச்சாரமானது பழைய பேருந்து நிலையம், முதல் அக்ரஹாரம், இரண்டாம் அக்ரஹாரம், ராஜகணபதி திருக்கோவில், உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்றது. இந்த பிரச்சாரக் கூட்டத்தின் போது, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்த நான்கரை வருட காலத்தில், அதிமுக ஆட்சியில் செய்யப்பட்ட பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் குறித்து, துண்டு பிரசுரங்கள் மூலம் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு, அத்திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இந்தத் திண்ணைப் பிரச்சார கூட்டத்தில், சேலம் மாநகர் மாவட்ட பொறுப்பாளரும், முன்னாள் மொரப்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான சிங்காரம், சேலம் மாநகர் மாவட்ட செயலாளரும், முன்னாள் சூரமங்கலம் மண்டல குழு தலைவருமான ஏகேஎஸ்எம் பாலு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், முன்னாள் எம்எல்ஏக்கள் செல்வராஜ், ரவிச்சந்திரன், சக்திவேல், சேலம் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவரும், அம்மாபேட்டை பகுதி அதிமுக செயலாளருமான யாதவமூர்த்தி, சேலம் மாநகர் மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர் முருகன், சேலம் மாநகர் மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள், உள்ளிட்ட அதிமுகவை சார்ந்த 500க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என, இந்தத் திண்ணை பிரச்சாரத்தில் கலந்து கொண்டனர்.